O.S.No. : 67/2023

Dated : 12.02.2026

**வா.சா.1 : கணேசன் ; த/பெ. ராமன்**

**<u>1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

3. எனக்கு தமிழ் மொழியில் நன்றாக எழுத படிக்க தெரியும், ஆங்கிலத்தில் ஓரளவிற்குத்தான் படிக்க தெரியும். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை ஆங்கிலத்தில்தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்துதான் கையொப்பம் செய்துள்ளேன், அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். எனது தகப்பனாருடன் பிறந்த நபர்கள் எத்தனை பேர் என்றால் 3 அத்தைகள் மற்றும் ஒரு தம்பி ஆகும். எனது தகப்பனாருடன் பிறந்த தம்பியான எனது சித்தப்பாவின் பெயர் லட்சுமணன் என்றால் சரிதான்.

4. எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் பத்தி-3-ல் எனது சித்தப்பா லட்சுமணன் புத்தி சுவாதீனம் இல்லாதவர் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனது சித்தப்பா லட்சுமணன் எத்தனை வருடங்களாக புத்தி சுவாதீனம் இல்லாதவராக உள்ளார் என்றால் சுமார் 30 முதல் 40 வருடங்களாக அவ்வாறு உள்ளார். எனது சித்தப்பா லட்சுமணன் அதற்கு ஏதாவது சிகிச்சை எடுத்து வந்தாரா என்றால் ஆமாம். எனது சித்தப்பா லட்சுமணன் சிகிச்சை எடுத்த விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். எனது சித்தப்பா லட்சுமணன் சிகிச்சை எடுத்து வந்தது தொடர்பாக இந்த வழக்கில் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன், என்னிடம் அசல் ஆவணங்கள் இல்லாததால் நகல் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன்.

5. தற்போது என்னிடம் காட்டப்படும் பத்திரங்கள் எனது தகப்பனாரும், எனது சித்தப்பா லட்சுமணனும் சேர்ந்து எழுதிக்கொடுத்தவை என்றால் சரிதான், ஆனால் அது பற்றி எனக்கு தெரியாது. (**அந்த 16.05.1995 தேதியிட்ட**

**கிரையப்பத்திரத்தின் நீதிமன்ற சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (12.06.1997 தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் நீதிமன்ற சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). எனது சித்தப்பா லட்சுமணன் நல்ல மனநிலையுடன் இருந்ததால்தான் மேற்படி கிரையப்பத்திரங்கள் எனது தந்தையாருடன் சேர்ந்து ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அவர் மனநலம் பாதிக்கப்பட்டுதான் இருந்தார். எனது தகப்பனாரின் உடல்நிலை மற்றும் மனநிலை நன்றாக உள்ளது என்றால் சரியல்ல, அவர் தற்போது சற்று உடல்நலம் குன்றிதான் உள்ளார்.

6. நான் வழக்கிற்காக எனது தகப்பனார் தாக்கல் செய்த அசல் வழக்கு எண் 236/2002 குறித்து தெரியாது என்றும், எனது சித்தப்பா லட்சுமணன் மனநலம் குன்றி உள்ளார் என்றும் கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு பொய் வழக்கு என்பதால் எனது வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**: இல்லை

L. Prakash

Digitally signed by L. Prakash
Date: 2026.02.12 17:28:22 +0530